## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை
## O.S. No. 142/2019
## 2025ம் வருடம் அக்டோபர் மாதம் 8 ம் நாள் புதன்கிழமை

**பி.வா.சா.2** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு. பிச்சைமுத்து என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணமூர்த்தி | த/பெ | **செல்வம்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் 2வது பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.30 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)
2. செல்வம் இறப்புச் சான்று இணையதள நகல் பி.வா.சா.ஆ.31
3. செல்வம் வாரிசு சான்று இணையதள நகல் பி.வா.சா.ஆ.32
4. வணிகவரித்துறை பதிவுச் சான்று அசல் பி.வா.சா.ஆ.33

மேற்படி பி.வா.சா.ஆ.33, 3 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை